27.11.2011 . Pg 15 . Veerakesari

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை வெளியிடக் கோருகிறது கனடா தமிழர் பேரவை

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட 400 பக்கங்கள் கொண்ட அறிக்கை நவம்பர் 20ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையை தாமதமின்றி வெளியிட வேண்டும் என கனடிய தமிழர் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

ஒரு ஆண்டுக்கும் மேலாக தாமதித்து வெளிவந்துள்ள இவ்வறிக்கையை இலங்கை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப் போவதாக ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்திருந்தாலும் இதுவரை அவர் அதனைச் செய்யவில்லை.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவினால் மே மாதம் 2010 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. இதன் விசாரணைகளின்போது 1000இற்கு மேற்பட்டவர்கள் நேரடியாகவும் 5000இற்கு மேற்பட்டவர்கள் எழுத்து மூலமாகவும் சாட்சியம் அளித்திருந்தனர்.

ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் பான் கி மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை 'இலங்கையின் விடுதலைப் புலிகளுக்கெதிரான போரில் மனித உரிமைகள் கடுமைத்தனமாக மீறப்பட்டதாகவும் பொதுமக்களைப் பெருமளவும் பாதித்த போர்க்குற்றங்கள் நிகழ்ந்ததற்கான சாட்சியங்கள் உள்ளதாகவும் தெரிவித்திருந்தது.

இதன்காரணமாக ஏற்பட்ட சர்வதேச அழுத்தத்தைத் தவிர்ப்பதற்காகவே இலங்கை அரசாங்கம் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து 18 மாதங்கள் கடந்தும் இவ் ஆணைக்குழுவின் அறிக்கை பொதுமக்கள் பார்வைக்காக இன்னமும் வெளியிடப்படவில்லை.

சர்வதேச மன்னிப்புச்சபை இவ் ஆணைக்குழுவின் விசாரணை பக்கசார்பானதென்றும், பொறுப்புடைமை நுட்பங்களை கொண்டதல்லவெனவும் தெரிவித்திருந்தது.

இதனை மேற்கோள் காட்டிய கனடிய தமிழர் பேரவையின் பேச்சாளர் . டேவிட் பூபாலபிள்ளை விசாரணையின் கண்டுபிடிப்புகள் பொதுமக்கள் பார்வைக்கு தெரிவிக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

அத்துடன் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் உண்மை அறிவதற்கு உரிமையானவர்கள் எனவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை நிலையும் பொறுப்புடைமையும் மட்டுமே எதிர்கால சமாதானத்துக்கு உதவும் எனவும் கருத்துத் தெரிவித்தார்.